ISSN:2582-9599

# சமுதாயவியல் நோக்கில் "செக்கு மாடுகள்"

**முனைவர் சி. அருள் மைக்கேல் செல்வி**
**உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்**
**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி)**
**மதுரை – 625 018. adonispeo@gmail.com**

39

**ஆய்வுச் சுருக்கம்**

தென்திராவிட மொழிகளுள் ஒன்றாகக் கருதப்படும் தமிழ்மொழி வளமான இலக்கண இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்ட சிறப்பினை உடையது. காலப் பழமையும் இலக்கியச் செழுமையும் உடைய மூத்த மொழி. முத்தமிழாய் முகிழ்த்த காரணத்தால், தமிழ் மகள் ஔவையும் "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்று துங்கக் கரிமுகத்துத் தூமணியிடம் வேண்டினாள். காப்பியம், புதினம், புனைகதை, சிறுகதை போன்ற பலவகையான இலக்கிய வடிவங்கள் கதைகளைக் கூறினாலும் கண்ணையும் கருத்தையும் ஒருசேரக் கவரும் ஆற்றல் நாடகத்திற்கு மட்டுமே உண்டு. ஐம்புலன்களின் வாயிலாக அறிவைத் தருகின்ற நாடகங்கள் நிகழ்காலத்தை ஊடுருவிப் பார்க்கும். அன்றாட வாழ்க்கையில் உள்ள தீய இயல்புகளின் கொடுமைகளையும் நல்ல இயல்புகளின் நலன்களையும் படம்பிடித்துக் காட்டும். உயர்ந்த படிப்பினைகளை உலகிற்குக் கூறும் நாடகத்தால் ஒரு சமுதாயமே மேம்பாடு அடையும்.

**திறவுச் சொற்கள்**

கோமல் சுவாமிநாதன் – செக்கு மாடுகள் - நாடகக் கரு – நாடக மாந்தர்கள் – விவசாயம் – பணத்தின் ஆதிக்கம் – வரதட்சணை – முதலாளிகள் சரித்திரம் – வாழ்வியல் உண்மைகள்.

**ஆய்வு நோக்கம்**

ஆறறிவு படைத்த மக்களினத்தோடு பிணைந்து நிற்கும் அமைப்பே சமுதாயம் ஆகும். ஒரே விதமான எண்ணங்களை உடைய மனிதர்கள் தங்களுடைய ஒத்த தன்மையை உணரும்போது சமூகம் உருவாகிறது. சமுதாய அமைப்பில் இணைந்த மனிதன் பொதுநலன் கருதாமல் சுயநலம் பேணுகிறபோது சிக்கல்கள் எழுவது இயல்பு. சமுதாய வாழ்க்கையில் ஏற்படுகின்ற இச்சிக்கல்களைச் சுட்டிக்காட்டி அச்சிக்கல்களில் இருந்து விடுபட நினைக்கும் மக்களை நெறிப்படுத்தி அவர்களுக்கு வழி காட்டுவதே இலக்கியப் படைப்பாளர்களின் நோக்கம் ஆகும். இத்தகைய இலக்கியங்களைச் சமுதாய நோக்கோடு படைத்து வெற்றி பெற்றவர்கள் பாவேந்தர் பாரதிதாசன், அறிஞர் அண்ணா, கலைஞர் மு.கருணாநிதி போன்றோர் ஆவர். சமுதாய மேம்பாட்டிற்கான படைப்புக்களை உருவாக்கிய பலருள் "கோடையிடி கோமல்" என்று அழைக்கப்படுகின்ற கோமல் சுவாமிநாதனும் ஒருவர் ஆவார். இவருடைய படைப்புகளுள் ஒன்றான " செக்கு மாடுகள் " என்ற நாடகத்தைச் சமுதாயவியல் நோக்கில் ஆய்வு செய்வது இவ் ஆய்வின் நோக்கம் ஆகும்.

**கோமல் சுவாமிநாதன்**

"நாடகத்தின் அடிப்படைச் சாராம்சம் பாதிக்கப்படாமல் உள்ளடக்கத்திலும் உத்தியிலும் பல

பரிசோதனைகளைச் செய்து புதிய பரிமாணம் படைத்தவர் கோமல் சுவாமிநாதன்" என்கின்றார் சிட்டி பெ.கோ. சுந்தர்ராஜன் (http://tamil.wiki>wiki>). 1935 ஆம் ஆண்டு ஜனவரி 27ஆம் நாள் ஸ்ரீநிவாசன், அன்னபூரணி ஆகியோருக்குக் காரைக்குடியில் பிறந்தார். காமராஜருடன் அறிமுகமான காலகட்டத்தில் பெற்றோரின் ஊரான "கோமல்" என்ற ஊரின் பெயரை அடைமொழியாகப் பெற்றார். பள்ளிப் பருவத்தில் பல்வேறு போட்டிகளில் பங்குபெற்ற இவர், பல நாடகங்களிலும் நடித்தார். நாடகத்தின் மேல் கொண்ட ஈடுபாட்டால் பெற்றோருடன் 1957-ல் சென்னைக்கு வந்தார். எஸ்.வி. சகஸ்ரநாமத்தின் "சேவா ஸ்டேஜ்" குழுவில் சேர்ந்தார். 1960ஆம் ஆண்டு "புதிய பாதை" என்ற முதல் நாடகத்தை எழுதினார். 1971ஆம் ஆண்டு நண்பர்கள் சிலருடன் இணைந்து "ஸ்டேஜ் பிரண்ட்ஸ்" என்ற நாடகக்குழு ஒன்றினைச் சொந்தமாக உருவாக்கினார். சன்னதி தெரு, நவாப் நாற்காலி, மந்திரி குமாரி, வாழ்வின் வாசல், யுத்த காண்டம், மின்னல் கோலம் உள்ளிட்ட 33 நாடகங்களை எழுதி அரங்கேற்றினார். "தண்ணீர் தண்ணீர்" என்ற நாடகத்தால் அகில இந்திய அளவில் அறியப்பட்டார். இவரின் பல நாடகங்கள் திரைப்படங்களாகவும் வெளி வந்துள்ளன.

தமிழாசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய கோமல் சுவாமிநாதன் நாடகப் படைப்பாளர், பத்திரிகையாளர், மேடைப்பேச்சாளர், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர், பாடத்திட்டக்குழு உறுப்பினர் எனப் பல பரிமாணங்களைக் கொண்டவர். சமகாலச் சமுதாயம் மற்றும் அரசியல் பிரச்சினைகளையும் அறப் பிரச்சினைகளையும் மையமாகக் கொண்டு படைப்புக்களை உருவாக்கும் இவரின் எழுத்துக்கள் யதார்த்தமானவை. இவர் 1980ஆம் ஆண்டில் "செக்கு மாடுகள்" என்ற நாடகத்தை எழுதியுள்ளார். இந்த நாடகம் 1981ஆம் ஆண்டில் எஸ். சங்கரன் இயக்கத்தில் "சாதிக்கொரு நீதி" என்ற பெயரில் தமிழ்த் திரைப்படமாக வெளிவந்துள்ளது.

**செக்கு மாடுகள்**

பெரு நிலக்கிழார்களின் அதிகார வேட்கையால் வேட்டையாடப்படும் பெருங்குடி மக்களின் வேதனை முனகல்களை எடுத்துரைக்கும் நாடகம் "செக்கு மாடுகள்" ஆகும். 1983ஆம் ஆண்டு ஜூன் திங்களில் மயிலவன் பதிப்பகத்தின் முதல் பதிப்பாக இந்த நாடகம் வெளிவந்துள்ளது. 46 காட்சிகள் இடம் பெற்றுள்ளன. 100 பக்கங்களுடன் 6 ரூபாய் விலையில் வெளியிடப்பட்டுள்ள இந்த நாடகம் சமகாலச் சமுதாயத்தைச் சிறந்த முறையில் பதிவுசெய்துள்ள உயரிய ஆவணமாகத் திகழ்கின்றது.

**நாடகக் கரு**

நல்ல நாடக ஆசிரியர் தாம் வாழும் மக்களிடம் காணப்படும் உயர்ந்த பண்புகளின் அடிப்படையிலும் புதிதாகத் தோன்றும் கருத்துக்களின் அடிப்படையிலும் தாம் காண விரும்பும் சமுதாயத்தின் அடிப்படையிலும் தன் நாடகத்திற்கான கருவை உருவாக்கிக் கொள்கின்றார். (சி. அருள் மைக்கேல் செல்வி, அண்ணாவின் வேலைக்காரியில் சமுதாயச் சீர்திருத்தம், ப.583) இந்த அடிப்படையில் கோமல் சுவாமிநாதன் அவர்களால் உருவாக்கப்பட்ட நாடகம் தான் "செக்கு மாடுகள்" ஆகும். இந்நாடகம் காவிரி நதியின் கரையில் அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த "வேதபுரம்" என்ற சிறு கிராமத்தில் உள்ள விவசாய மக்களின் உரிமைக்கான போராட்டங்களை மையமிட்டது. தினமும் செக்கினையே சுத்திச் சுத்தி வரும் செக்காட்டும் மாடு, குறைவான எடை

உடைய உலக்கையையே இழுத்துப் பழகியதால் சுமை இழுக்கும் திறன் குறைந்து விவசாயத்திற்கோ நிலம் உழுவதற்கோ பயன்படாமல் போகும். ஓரே வட்டத்திற்குள் திரும்பத் திரும்பச் சுற்றிக்கொண்டிருக்கும் இம்மாட்டினைச் ''செக்கு மாடு'' என்பர். உழைப்புச் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்ட அடிமை விவசாயிகள் பண்ணையார்களால் நசுக்கப்பட்டு அரசாங்கம் நிர்ணயித்த கூலியைப் பெற முடியாத நிலையிலும் எசமான விசுவாசத்தால், ''இத்தனை நாளா எப்படி உழைச்சமோ அப்படியே உழைக்கிறோம்'' (ப.99) என்று கூறுகின்ற போது முதலாளிகளை எதிர்க்கத் திராணியின்றி இருக்கின்ற விவசாயிகள் ''செக்கு மாடுகள்''.

படித்து அரசுப் பணியில் இருந்தபோதிலும் மணமகள் வீட்டார் தரும் வரதட்சணையை எதிர்பார்க்கும் முதுகெலும்பில்லாத இளைஞர்கள் ''செக்கு மாடுகள்''. தற்கொலை செய்து இறந்துபோன மகளைத் தேடிப் பைத்தியமான தந்தை, விவசாயிகளின் நலன் கருதி ஊரின் நன்மைக்காகத் தொண்டு செய்யச் சென்ற மற்றொரு மகளையும் தேடிக் கொண்டிருப்பதால் அவரும் ஒரு ''செக்கு மாடு'' எது நடந்தாலும் எதுவுமே நடவாதது போல காயத்திரி ஜெபம் செய்யும் அய்யரும் ஒரு ''செக்கு மாடு'' இப்படிச் செய்ததையே திரும்பத் திரும்பச் செய்து தீமைகளை எதிர்த்துப் போராடத் துணிவில்லாத மனிதர்களை ஆசிரியர் ''செக்கு மாடுகள்'' என்கின்றார்.

**நாடக மாந்தர்கள்**

ஒரு நாடகத்தின் சிறப்பு அதன் அரிய செயலோட்டத்திலும் பாத்திரப் படைப்பிலும் அடங்கியிருக்கின்றது என்கிறார் சு.பாலச்சந்திரன். (சு. பாலச்சந்திரன், இலக்கியத் திறனாய்வு, பக்.238-239) "செக்கு மாடுகள்" நாடகத்தில், காடன் என்ற ஹரிஜன் இனத்தைச் சேர்ந்த இளைஞன் வேதம், உபநிஷதம், பிரம்ம சூத்திரம் ஆகிய அனைத்தையும் அறிந்தவனாகவும் உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்த பண்ணை அடிமையாகவும் பத்து மா நிலம் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்பவனாவும் மனித மதிப்புடன் வாழ விரும்புபவனாகவும் தன் இன முன்னேற்றத்திற்குப் பாடுபடுபவனாகவும் முதலாளிகளின் உழைப்புச் சுரண்டலை எதிர்ப்பவனாகவும் பூமித்தாயை மிகவும் மதிப்பவனாகவும் ஜனநாயகம், புரட்சி, போராட்டம், உரிமை, சட்டம் ஆகியவை குறித்த ஆழமான அறிவை உடையவனாகவும் விவசாயிகளின் கூலி முரண்பாட்டினைக் களைய "விவசாய சங்கம்" அமைக்க வேண்டும் என்பதில் முயற்சி உடையவனாகவும் உணவுப் பொருள் வீணாகக் கூடாது என்பதில் உறுதியுடையவனாகவும் விவசாயிகளுக்கான போராட்டத்தை முன்னெடுப்பவனாகவும் படைக்கப்பட்டுள்ளான். இவன் அலமேலு என்ற பெண்ணின் மானத்தைக் காப்பதற்காகப் பண்ணையார் பாபநாசத்தை வெட்டிக்கொன்றதால் சிறை செல்கின்றான்.

ஜெயிலில் இருந்தபோது இவனுடைய அறை நண்பராக அறிமுகமானவர் கல்லூரிப் பேராசிரியர் வல்லபன் என்பவர். இவரைத் தன்னுடைய குருவாக ஏற்றுக்கொண்டான் காடன். இவர், வேதம், உபநிஷதம், கார்ல் மார்க்ஸ், காந்தீயம், அரசியல் தத்துவங்கள் ஆகிய அனைத்தையும் அறிந்த மகாஞானி. வாழ்க்கை முழுமையையும் ஆராய்ச்சிக்காக அர்ப்பணித்தவர். புராதனமான வேதமந்திரங்களும் நவீனமான கம்யூனிச தத்துவங்களும் அடிப்படையில் ஒன்றுதான் (ப.14) என்பதை உணர்த்த ஆராய்ச்சி செய்தார். ஆராய்ச்சி மேல் உள்ள ஈடுபாட்டால் வீட்டினை மறந்தவர். மனைவியின் நம்பிக்கைத் துரோகத்தால் மனைவியைக் கொலை செய்து சிறை

செல்கின்றார். சிறையில் காடனிடம் "ஹரிஜனோ, சத்திரியனோ, பிராமணனோ எல்லாருக்கும் உள்ளது ஒண்ணரை அவுன்ஸ் மூளைதான். அதை எந்த அளவுக்கு உபயோகப்படுத்தறமோ அந்த அளவுக்கு முன்னுக்கு வரோம்" (ப.15) என்று கூறினார். மேலும், "தர்ப்பணம் பண்றதோ திவசம் பண்றதோ சடங்குகள் என்றும் நீ யாருங்கிறதைக் கண்டுபிடிக்கிற முயற்சி வேதம்" (ப.15) என்றும் கூறிச் சடங்குகளுக்கும் வேதத்திற்குமான வேறுபாட்டை எடுத்துரைக்கின்றார்.

"வேதபுரம்" கிராமத்தின் பண்ணையாராக இருப்பவன் பாபநாசம். விரும்பியதை அடைய வேண்டும் என்று நினைப்பவன். போலீஸ், கலெக்டர், அரசியல்வாதி ஆகியோரைத் தன்னுடைய பணபலத்தால் தன் வசம் வைத்திருப்பவன். அவ்வூரிலுள்ள 20 வயதுப் பெண்ணான அலமேலுவைப் பலவந்தப்படுத்த முற்பட்டபோது காடனால் கொல்லப்பட்டவன். அலமேலு தற்கொலை செய்துகொள்வதற்கும் அலமேலுவின் தந்தை குப்புசாமி பைத்தியமாவதற்கும் காரணமானவன். இவனுடைய மகன் சிவலிங்கம். சின்னப் பண்ணையார் என்றும் சின்னதுரை என்றும் அழைக்கப்பட்டவன். தன் தந்தையைப் போலவே பெண் பித்தன். ஏழெட்டு ஆசை நாயகிகள் வைத்திருப்பவன். அலமேலுவின் தங்கை கல்யாணிடம் ஆசை வார்த்தை கூறி வாழ்வு கொடுக்க விரும்புவதாகக் கூறுபவன். காடனின் குத்தகை நிலத்தைக் காடனிடம் கொடுக்க மறுப்பவன். காடனைத் தனக்குப் பண்ணையாளாக இருக்கும்படிக் கூறுபவன்.

இந்நாடகத்தில் வரும் சுயம்பு சாஸ்திரி, திருப்பராய்த்துறைப் பாடசாலையில் வேதம் பயின்றவர். வைதீகம் பண்ணி வாழ்க்கை நடத்துபவர் (ப.8). கஞ்சா சாப்பிடுபவர். காடன் அதைச் சுட்டிக்காட்டிய போது, காடனிடம் கையை நீட்டச் சொல்லிச் சத்தியம் செய்து கொடுத்ததுடன் "காசி விசுவநாதரே புலையன் உருவத்தில் குறுக்க வந்து ஆதிசங்கரருடைய சீடர்களுக்கு அத்வைதத்தை உணர்த்தின மாதிரி நீ எனக்கு வந்து சொல்லிட்டே. உண்மை எப்பவுமே சுடும்" (ப.13) என்று கூறியவர். கல்யாணியைச் சிவலிங்கம் தவறாகப் பேசியபோது, அநியாயத்தைத் தட்டிக்கேட்க நாகநாத அய்யரை அழைத்தவர். "ஞானத்தை அடையக்கூடிய வேதத்தைக் கைகழுவி விட்டுவிட்டு, லௌகீக வாழ்க்கைக்கு உள்ள பரமார்தீக வழிகளைப் பின்பற்றப் பயந்து ரெண்டுங்கெட்டான் நிலையில்" வாழ்கின்ற விமோசனம் அற்ற வாழ்க்கைக்காக வருத்தப்படுகின்றார். இன்றைய இளைஞர்களின் இரட்டைவேட வாழ்க்கையைக் கண்டிப்பவர். ஸ்ரீதர், கல்யாணி மற்றும் குருவப்பன், நாச்சி ஆகியோரின் திருமணத்தை வைத்தீஸ்வரன் கோயிலில் வைத்து நடத்தத் திட்டமிட்டுப் "பொதுஜன சேவை" (ப.55) செய்ய முயன்றவர். விவசாயிகளுக்கான போராட்டத்தில் முதற்பலியாகத் தன் உயிரையும் கொடுக்க முன்வந்தவர். பொது உடைமையை விரும்புபவர் (ப.97).

இவருடன் இணைந்து தர்ப்பணம் பண்ணுபவர் நாகநாத அய்யர் ஆவார். சுயம்பு, கஞ்சா பழக்கம் உள்ளவர் என்பதை அறிந்தவுடன் தர்ப்பணமே வேண்டாம் என்று கூறி, "ஒரு காலத்தில் நாமும் நல்லவனா இருந்துண்டு ஊருக்கும் நல்லது சொன்னோம். அதனாலதான் நமக்கு மரியாதை. இன்னிக்குக் காடன்கிற ஒரு ஹரிஜன் நமக்கு நல்லது சொல்ற அளவுக்கு நாம கீழே இறங்கிட்டம்னா, நமக்கு இந்தப் பூணூலே வேண்டாம். ஓடுற காவிரியில அறுத்தெறிஞ்சுடலாம்." (ப.9)

என்று கூறுபவர். சட்டத்தையும் நியாயத்தையும் தனி மனிதன் தன் கையில் எடுக்கக் கூடாது (ப.29) என்று கல்யாணியிடம். கூறுகின்றார். இந்தக் காலத்துப் பிராமணனுக்குத் தபோ பலம் ஏது? அரிசி பலம் தான் உள்ளது என்று சுயம்புவிடம் கூறுகின்றார். சுப்புரத்தினம் அய்யரிடம் வேதம் படித்த வாய் வாக்குறுதியை மீறக்கூடாது என்றும் அகிலம் முழுவதுக்கும் சத்யம் ஒன்றுதான் (ப.86) என்றும் "உம்மாதிரி செல்வம் படைச்சவாள் எல்லாம் நேர்மையா நடந்துக்கிறதுனாலதான் சனாதன தர்மம் தழைக்கிறதுன்னு நம்பிண்டிருந்தேன்" (ப.87) என்றும் கூறி, மத்தவாள்ளாம் தப்பு பண்ணலாம்: வாக்குறுதியை மீறலாம் ……. ஆனால் பல ஆயிரம் வருச தர்மத்தை, சத்தியத்தை நீங்க காப்பாத்துங்கோன்னு முடிச்சுப்போட்டு அதுக்குப் பிரம்ம முடிச்சுன்னு பேர் வச்சு அதை நம்ப கையில ஒப்படைச்சிட்டுப் போயிருக்காளே, அதை நாம மீறலாமா? (ப.87) என்றும் கேட்டுப் பூணூலைக் கழற்றி எறிய முற்படுகிறார். அந்த நேரத்தில் காடன், "உங்களுக்குப் பூணூல் இருக்கிறது அறிவு முதிர்ச்சியைக் காட்ட. நீங்களே பூணூலைக் கழற்றி எறிஞ்சுட்டா, இந்த நாட்டுல தர்மமே தலைகுப்புற விழுந்து தரை மட்டமாயிடும் சாமி." (ப.87) என்கிறான். கல்யாணியின் வளர்ப்புத் தந்தையாகிய இவர் கல்யாணி, காடனின் வீட்டுக்குப் போவதையும் சங்கம் அமைப்பதற்கான முயற்சியில் அவனுடன் இணைந்து பணியாற்றுவதையும் விரும்பாதவர். இருந்தாலும் ஊர் நன்மைக்காகக் காடன் செய்து வரும் சேவையாலும் கல்யாணி, காடனுக்குத் தொண்டு செய்ய விரும்புவதாலும் "காடன் ஒரு ஹரிஜனா இருக்கலாம். தீண்டப்படாதவன்னு இவாள்ளாம் சொல்லலாம். ஆனா மனசால கூட தீண்டப்படாதவ ரொம்பப் பேர் உயர்ந்த ஜாதின்னு சொல்லிண்டு இருக்காயா. அவாளைவிட ஆயிரம் மடங்கு உயர்ந்தவன் காடன். வருணாசிரம தர்மத்தை எல்லாம் கடந்த மகா மனிதன் அவன்" (ப.92) என்கிறார்.

காடனைப் போலவே, அம்பேத்கார் மன்றம் அமைத்து அதன் செயலாளராகப் பணி செய்கிறவன் குருவப்பன் (ப.53). சுடலை மகள் நாச்சியை விரும்புபவன். விவசாயிகள் சங்கம் அமைப்பதில் காடனுக்குப் பக்கபலமாக இருப்பவன். தானியக் கிடங்கிலே தீயை வைத்துக் கொளுத்துவோம் என்று கூறும் இவன் தந்தை சொத்தை விரும்பாதவன். காடனின் பணியைத் தொடர்ந்து செய்ய, போராட்டக் கொடியை உயர்த்திப் பிடிக்கக் காத்திருப்பவன்.

குருவப்பனின் தந்தை பாப்பையன் பன்றி வியாபாரி. சிவலிங்கத்தின் துணையால் பண்ணையாராக ஆனவர். இவரைப்போலவே மைக்கேல் உடையாரும், சுப்புரத்தினம் அய்யரும் பண்ணையார்கள். சிவலிங்கத்தின் கூடவே இருந்து அவன் விரும்பும் உதவிகளைச் செய்துகொடுப்பவன் மன்னாரு ஆவான். சிவலிங்கத்திடம் பண்ணை வேலை செய்கிறவன் சுடலை. சுடலையின் மகள் நாச்சி. குப்புசாமியின் மகள்கள் அலமேலு, கல்யாணி. அவமானம் தாங்காமல் காவேரியில் விழுந்து தற்கொலை செய்துகொண்டவள் அலமேலு. அவள் தங்கை கல்யாணி. மாயவரம் டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் வேலை செய்பவள். அநியாயத்தைக் கண்டு எதிர்த்த காடனை நீ தான் ஹீரோ என்று கூறுகின்றாள். சிவலிங்கத்திடம் "ஒரு நல்ல பெண்ணாப் பார்த்துத் தாலி கட்டிக் கல்யாணம் பண்ணி ஒழுங்கா இரு. நாய் மாதிரி அலையாதே" (பக்.27, 28) என்று

எச்சரிக்கை செய்கின்றாள். கோவில் தர்மகர்த்தா ராமநாத அய்யர், மன்னார்குடி பட்டாவையர், விவசாயிகள் சங்கம் ஆரம்பித்த மன்னம் பந்தல் முத்துச்சாமி மற்றும் விவசாயிகள் பலரும் இந்த நாடகத்தின் கதை வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கின்ற மாந்தர்கள் ஆவார்கள்.

**விவசாயம்**

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (குறள், 1031)

என்கின்றார் வள்ளுவர். விவசாயக் கூலிகளுக்கும் நிலம் வைத்திருக்கும் பண்ணையாருக்கும் இடையே நடைபெறுகின்ற கூலி முரண்பாடுகளைக் களைவதற்காக "விவசாய சங்கம்" அமைப்பதன் தேவையை முன்வைக்கின்றது இந்த நாடகம்.

"மண்ணை நம்பி வாழுற விவசாயிகளுக்கு எந்தக் காலத்திலும் நீதி வழங்கப்பட்டதில்லை. அந்த விவசாயினுடைய போராட்டமும் நசுக்கப்படுது. முழுவயிறு சாப்பிட எனக்கு உரிமை இருக்கும் போது ஏன் அரை வயிறு சாப்பிட்டுப் பட்டினி கிடக்கணும்" (ப.69) என்ற காடனின் கூற்று இதனை மெய்ப்பிக்கின்றது. விவசாய சங்கம் அமைக்கும் முயற்சியில் ஈடுபடும் காடன், உணவுப்பொருள் நாசமானால் அது நாட்டுக்கே நஷ்டம். உணவுப் பற்றாக்குறையான இந்தக் காலத்தில் விளைஞ்ச பயிர் அழியக் கூடாது" (ப.80) என்கின்றான். பாட்டன், முப்பாட்டன் காலத்தில் இருந்து நிலத்தை உழுகின்ற மக்களையும் ஏர்ப்பிடித்து உழுகின்ற நிலத்தைத் தாயாக மதிக்கின்ற மேன்மையையும் "ஒரு மானமுள்ள விவசாயி மண்ணைப் பொன்னாக நினைக்கின்றான்" என்பதையும் இந் நாடகம் பதிவு செய்துள்ளது. நெல் விளையும் நிலத்தில் சவுக்கு நாற்றுகளை நட்டால், நிலம் பாழாய்ப் போகும். இதனை, "நஞ்சை நிலத்தில் சவுக்கு நாத்தை நட்டா ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தறதுக்கு சமம். நாம் கேட்குறதை எல்லாம் கொடுக்கிறவ பூமித்தாய். அவளை மலடியாக்காதே. அதனாலே ஊர்ல பஞ்சம் வரும், ஏழை பாழைங்கள்ளாம் பட்டினி கிடந்து சாவாங்க" (ப.94) என்று சிவலிங்கத்தின் சித்தப்பா கூறுவதில் இருந்து அறியலாம். "எத்தனையோ தலைமுறையா எங்கள் உழைப்பில் வளர்ந்த இந்த மண்ணுல, எங்க வியர்வையில துளிர்விட்ட இந்தப் பூமியில நான் வேர் ஊனாம தடுக்க" யாராலும் முடியாது (ப.36) என்று காடன் கூறுவதிலிருந்து மண் மேல் அவன் கொண்டிருக்கும் அதீத நம்பிக்கை புலனாகின்றது. விவசாயிகள் கூட்டத்தில் கலந்துகொள்ள விரும்பும் கல்யாணி, உணவை உற்பத்தி செய்யும் விவசாயிகள் குறித்து ஸ்ரீதரிடம் கூறும்போது, "நான் அரிசிதான் சாப்பிடறேன். அதனால அவங்களோட எனக்குச் சம்பந்தம் இருக்கு" (ப.67) என்கின்றாள்.

**பணத்தின் ஆதிக்கம்**

"ஈட்டி எட்டின மட்டும் பாயும். பணம் பாதாளம் மட்டும் பாயும்" என்றும் பணம் பத்தும் செய்யும் என்றும் கூறுகின்ற பழமொழிகளால் பணத்தின் ஆதிக்கத்தினை நாம் அறிந்துகொள்ள முடியும். அளவு கடந்த பணம் ஒரு மனிதனைத் தீய வழிகளுக்கு அழைத்துச் செல்லும் என்பதை இந்நாடகம் தெளிவாகக் காட்டுகின்றது. பண்ணையார் பாபநாசமும் அவன் மகன் சிவலிங்கமும் பணத்தைத்

தவறான முறையில் கையாளுகின்றனர். இதனை, “என்னைத் தட்டிக்கேட்க இந்த ஊரில என்ன, இந்தியாவிலேயே ஆள் கிடையாது. இந்த வட்டார போலீஸ் அதிகாரிக்கு கவர்மெண்டு சம்பளம் வரதுக்கு முன்னால மாசா மாசம் நான் கவர்ல போட்டு அனுப்பற பணம் போய் சேருது. இந்த ஊருக்கு மாத்தி வர கலெக்டர் மனைவிக்கு மறுநாளே ஒரு வைர நெக்லஸ் போய் சேருது. எந்த கட்சி வந்தாலும் எங்களை அசைக்க முடியாது. எந்த கட்சிக்காரனும் தேர்தல்ல நிக்க என் பணம்தான் தேவைப்படுது. (பக்.10, 11) என்று பாபநாசம் கூறுவதிலிருந்து இதனை அறிய முடிகின்றது. பாபநாசத்தின் மகன் சிவலிங்கம், கல்யாணியிடம் “உனக்கு பத்து மா நெலம் எழுதி வைக்கிறேன். உன் பேரில பாங்குல பணம் டெபாசிட் பண்றேன். மாயவரத்திலே ஒரு வீடு எடுத்துத் தரேன்” (ப.27) என்கின்றான். நிலம் உள்ள மிராசுதார்கள் பண பலத்தால் ஏழை வயிற்றில் அடிக்கும் அவலம் அரங்கேறுகின்றது. “தனிமனிதர்களின் கையில் போய் செல்வம் குவியிறபோது அந்த நாட்டின் ஒழுக்கமும் சீரழிகிறது”. (ப.63) பணம் கையில் சேர்ந்தவுடன் ஓர் இனத்தில் உள்ள உயர்ந்தவனே அந்த இனத்தில் உள்ளவனை மதிப்பது இல்லை. ஜாதி, இனம், மனிதாபிமானம் அனைத்தும் போய்விடுகின்றது. இந்நிலை மாற, “எவன் கையிலும் பணமே இல்லாமல் பண்றதுக்கு ஏதாவது வழி இருக்கா?” (ப.55) என்று பார்க்க வேண்டும் என்றும் “காந்திஜி சொன்ன மாதிரி, நம்ம கையில இருக்கிற பணம் பொதுப்பணம். நாம அதுக்கு தர்ம கர்த்தாதான்கிற எண்ணம் ஒவ்வொரு பணக்காரனுக்கும் வந்துட்டா நாடு சுபிட்சமடையும்” (ப.55) என்றும் ஆசிரியர் பதிவுசெய்வதில் இருந்து பணத்தின் ஆதிக்கத்தினை அறிய முடிகின்றது.

**வரதட்சணை**

“வரதட்சணை” வாங்குவதும் கொடுப்பதும் குற்றம் என்று சட்டமாக்கப்படாத காலகட்டத்தில் வரதட்சணை வாங்குவதை விரும்புகின்ற பெற்றோரையும் பிள்ளையையும் இந்நாடகம் பதிவு செய்கின்றது. தன்னுடைய நான்காவது மகனாகிய ஸ்ரீதருக்குப் பெண் பார்க்கும் சுப்புரத்தினம் அய்யர், பெண் வீட்டார் 50,000 ரூபாய் கையில் கொடுக்க வேண்டும் என்றும் 40 பவுனுக்கு நகை போட வேண்டும் என்றும் பஞ்சபாத்ர உத்தரணி, வெள்ளிக் குத்துவிளக்கு உட்பட இருபதினாயிரம் ரூபாய்க்குச் செய்ய வேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார். சுயம்பு சாஸ்திரிகளிடம் தன்னுடைய மூத்த மருமகள் ஜஸ்டிஸ் வேத ரத்னமய்யர் பெண் என்றும், இரண்டாவது சம்பந்தி பைனான்ஸ் செக்ரடரி பாராங்குசத்துடைய பெண் என்றும் மூன்றாவது பையனுக்கு 50,000 வரதட்சணையும் பெண்ணுக்கு 40 பவுன் நகையும் கொடுத்தார்கள் என்றும் கூறி, நான்காவது மகன் ஸ்ரீதருக்கும் அதுபோலவே வேண்டும் என்றும் கூறுகின்றார். நாகநாத அய்யரின் வளர்ப்பு மகளாகிய கல்யாணி வேண்டாம் என்றும் நீடாமங்கலம் பண்ணையிலிருந்து பெண் எடுக்கப்போவதாகவும் கூறுகின்றார். சுப்புரத்தினம் அய்யரின் மகன் ஸ்ரீதரிடம் பேசும் சுயம்பு சாஸ்திரிகள், வேலையில்லாமல் சுற்றிக் கொண்டிருக்கும்போது வரதட்சணை வாங்குவது கேவலம் என்று கூறும் இளைஞர்கள், வேலை கிடைத்தவுடன் அப்பா அம்மா கேட்கிறார்கள் நாங்கள் என்ன பண்ணட்டும் என்று கூறுவதைச் சாடுகின்றார். வரதட்சணை வாங்கும் இளைஞர்கள் முதுகெலும்பு இல்லாதவர்கள்

என்றும் அவர்களை எல்லாம் நிறுத்தி வைத்துச் சுட வேண்டும் என்றும் கூறுகின்றார்.

உனக்கும் வேதசிரோன்மணின்னு பட்டம் வாங்கின உங்க அப்பனுக்கும் புத்தி எங்கடா போச்சு (ப.43) என்பவர், “வரதட்சணை வாங்கலாம்னு எந்த வேதத்துலடா சொல்லியிருக்கு. தம்பதிகளுக்கு அட்சதை போட்டு, ஆசீர்வாதம் பண்ணிட்டுச் சாப்பாடு கூட அவாவா ஆத்துல போய் சாப்பிடணும்னுட்டுத் தானடா கிருஷ்ய சூத்ரம் சொல்றது. உலகத்திலேயே ஹிந்துக் கல்யாணம் போல ஒரு சிம்பிளான விஷயம் கிடையாது. அதுல வரதட்சணையைக் கொண்டு வந்து புகுத்தி, எத்தனை பெண்களைத் தற்கொலை பண்ணிக்க வச்சுட்டேள்? வழி தவறிப்போக விட்டுட்டேள்? எத்தனை குடும்பத்தை நாசமாக்கிட்டேள்? எல்லாத்தையும் கெடுத்துக் குட்டிச்சுவர் பண்ணிட்டேளடா?” (ப.43) என்றும் பெண்ணைப் பெற்றவர் தலையில் மிளகாய் அரைக்கப்படாது, அது அநாகரிகம் என்றும் கூறுகின்றார். மேலும், “கோட்டுல இருந்து கோமணத் துணி வரைக்கும் மாமனாரிடம் கேட்பது கேவலம் என்றும், அவர் ஏற்பாடு பண்ணின காரில் மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் வரும்போது பன்னீர் தெளிப்பவர்கள் நாளைக்கே காரித் துப்புவார்கள் என்றும் ஏழாவது குழந்தை பிறக்கின்ற வரை மாமனார் செய்ய வேண்டும் என்று கையேந்தி நிற்பவர்கள் மானங்கெட்ட பசங்கள் என்றும் கூறு கின்றார். படித்தவன் சூதும் பாவமும் பண்ணினா அய்யோன்னு போவான் என்று பாரதி அன்றைக்கே சொன்னது போல நம்ம சமுதாயம் அய்யோன்னு போச்சு” (ப.44) என்று சமுதாயத்தில் நிலவுகின்ற வரதட்சணைக் கொடுமைகளைக் கூறி ஆதங்கப்படுகின்றார்.

**முதலாளிகள் சரித்திரம்**

பண்ணையார் பாபநாசத்தின் மகனாகிய சிவலிங்கம், தன் பணபலத்தால் பாப்பையன், மைக்கேல் உடையார், சுப்புரத்தினம் ஆகியோருடன் சேர்ந்துகொண்டு, காடன், குத்தகைக்கு எடுத்த நிலத்தை அவன் உழுவதற்குக் கொடுக்க மறுக்கின்றான். காடன், தன்னை முதலாளி என்று அழைக்க வேண்டும் என்று விரும்புகின்றான். காடனைத் தன்னுடைய பண்ணையாளாக இருந்து நாள் கூலி வாங்கிக்கொண்டு வேலை செய்யும்படிக் கூறுகின்றான். சங்கங்களால் நாடே குட்டிச்சுவராய் ஆகி விட்டதாகவும் முதலாளிகளின் மூலதனம் இல்லாமல் தொழிலாளிகளின் உழைப்பு பலன் தராது என்றும் சிவலிங்கம் கூறுகின்றான். அப்போது காடன், “உன் மூலதனத்தைக் கொண்டா இந்த ஊரில் இத்தனை நிலத்தை வாங்கினே? உங்கப்பா வாங்கினார் நீ அனுபவிக்கிறே. அவருக்குக் கிடைச்ச மூலதனம் உங்க தாத்தாகிட்ட இருந்து வந்தது. இப்படியே எடுத்துப் பார்த்தேன்னா உன் மூதாதைகளில் ஒருத்தன் பஞ்சம் பிழைக்கிறதுக்காக இந்த ஊருக்கு வந்திருப்பான். தனக்குக் கிடைச்ச புறம்போக்கு நிலத்தை உழுது இருப்பான். கோவில் நிலத்தில இருந்து கொஞ்சம் சேர்த்திருப்பான். கணக்குப் பிள்ளையை கைக்குள்ளே போட்டு பட்டாவை மாத்தியிருப்பான். வட்டிக்கடன் கொடுத்து ஒருத்தனை போண்டியாக்கி அவன்கிட்ட இருந்து கொஞ்சம் சேர்த்திருப்பான். பிரிட்டிஷ்காரன் பூட்சை துடைச்சதுனால அவன் கொஞ்சம் நிலம் கொடுத்திருப்பான். ஆகக்கூடி உழைச்சு சம்பாதிச்சது 1 பர்சன்ட். ஊரை ஏமாத்தி சம்பாதிச்சது 99 பர்சன்ட். இதுதான் இன்னிக்கு முதலாளிகள் அத்தனை பேருடைய சரித்திரம்” (ப.58) என்று கூறுவதிலிருந்து முதலாளிகளின் சரித்திரத்தினை அறிந்துகொள்ள முடிகிறது.

**வாழ்வியல் உண்மைகள்**

நாடகம் நேர்முகமாக வாழ்க்கையை ஒட்டியது. ஆடவர், பெண்டிர், அவர்தம் உறவு, எண்ணங்கள், உணர்ச்சிகள், அவர்கள் செயற்படுதற்குக் காரணமாக அமைபவை, இன்ப துன்பங்கள், போராட்டங்கள், வெற்றி தோல்விகள் இன்னோரன்னவைகளைப் பற்றியே நாடகம் அமைகின்றது. வாழ்க்கையையே நாடக ஆசிரியர் பொருளாகக் கொள்வதால் அதைப்பற்றிய தம் கருத்தினை அவர் வெளிப்படையாகவோ, குறிப்பாகவோ குறிப்பிடாமல் இருக்க முடியாது. எனவே, ஒவ்வொரு நாடகமும் அஃது எத்தகையதாயினும் வாழ்க்கையைப் பற்றிய ஒரு கருத்தினைக் கொண்டதாக அமைந்து, பொதுவாக ஒரு வாழ்க்கை உண்மையை உணர்த்துகிறது. (தா.ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், பக்.360, 361)

உழைக்கும் வர்க்கத்தை நசுக்க நினைக்கும் முதலாளிகளின் ஆணவத்தை எடுத்தியம்பும் இந்நாடகம் ‘‘உழைக்கிறவர்கள் இன்னிக்கு வாமன ரூபத்தோட உங்க காலடி பட்டு பூமியில அழுந்திக்கிட்டு இருக்காங்க. ஒரேயடியா அதை பூமிக்குள்ள புதைக்க நீங்க நெனச்சா அந்த வாமனன் விசுவரூபம் எடுத்துக் காட்டுத் தீ போல, பரவி உங்க முதலாளி வர்க்கத்தைச் சுட்டுச் சாம்பலாக்கி விடும்’’ (ப.36) என்ற காடனின் கூற்றுவழி அறியலாம். சிவலிங்கத்தின் வேலைக்காரனாகிய மன்னாரிடம், முதலாளி வர்க்கத்தின் இயல்பைக் கூறும் காடன், ‘‘வசதி படைத்தவன் தரமாட்டான். ஆனா வயிறு படைச்சவன் விடவே மாட்டான்’’ (ப.37) என்று சொல்கின்றான். கல்யாணி, சிவலிங்கத்தின் வீடு தேடி வந்து, நாலுபேருக்கு முன்னால் உன்னைச் செருப்பால் அடிப்பேன் என்று கூற, சிவலிங்கத்தின் சித்தப்பா, சிவலிங்கத்திடம் ‘‘அது எல்லாம் எரியுற வயிறுகள். வாயில நெருப்புதான் வரும். ஐஸ்கிரீம் வராது’’ (ப.39) என்றும். ‘‘சின்னப் பொறின்னு நீ நினைக்கலாம். ஆனா அதுவே ஊரை அழிக்கிற அக்னியாகவும் மாறும்’’ (ப.40) என்றும் கூறுகின்றார்.

ஸ்ரீதர், சுயம்பு சாஸ்திரிகளிடம் கல்யாணி வாயாடி என்று கூறுகின்றான். அப்போது சுயம்பு சாஸ்திரி, ‘‘வாய் உள்ள இடத்திலதாண்டா குணமும் இருக்கும். வாயை மூடிண்டு முழங்குண்ணி மாங்கொட்டை மாதிரி இருந்துண்டு ஊரைக் கெடுக்க மாட்டாடா’’ (ப.45) என்கிறார்.

ஜனநாயகத்தை மாற்றி அமைக்க இமயத்தில் இருந்து குமரி வரைக்கும் அடிப்படையில் இருந்தே பெயர்த்துப் புரட்டிப் போடுகின்ற மாபெரும் புரட்சி வரவேண்டும். நம்முடைய தத்துவம், மதம், சமூக ஒழுங்கு, பொருளாதாரம் ஆகிய அனைத்திற்கும் புதிய அர்த்தத்தைக் கொடுக்க வேண்டும் என்று காடன் குருவப்பனிடம் கூற, அதை எப்படி ஆரம்பிப்பது என்று குருவப்பன் கேட்கின்றான். அப்போது காடன்,

‘‘எந்தப் புரட்சியும் மக்கள் கிட்ட திணிக்க முடியாது. அது மக்கள் கிட்டே இருந்து வெடிக்கணும்’’ (ப.64) என்கின்றான்.

**முடிவுகள்**

கோமல் சுவாமிநாதனின் எழுத்துக்கள் யதார்த்தமானவை என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. “செக்கு மாடுகள்” நாடகத்தின் கருவானது விவசாயம் செய்கின்ற மக்களின் உரிமைக்கான போராட்டங்களை மையமிட்டு அமைந்துள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள முடிகின்றது. சமுதாய

நலனில் அக்கறை கொண்ட மாந்தர்களையும் சமுதாயச் சீர்கேட்டிற்குக் காரணமாக இருக்கின்ற மாந்தர்களையும் அவர்தம் செயல்பாடுகளையும் குறித்துத் தெரிந்துகொள்ள முடிகின்றது. மண்ணைப் பொன்னாக மதிப்பவர்கள் விவசாயிகள் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. அளவு கடந்த பணம் ஒரு மனிதனைத் தீய வழிகளுக்கு அழைத்துச் செல்லும் என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது. வரதட்சணை கேட்பதும் வாங்குவதும் அநாகரிகம் என்பதை உணர்ந்துகொள்ள முடிகின்றது. ஊரை ஏமாற்றி உயர்ந்த நிலைக்கு வந்தவர்கள் முதலாளிகள் என்பதைத் தெரிந்து தெரிந்துகொள்ள முடிகின்றது. வாழ்வியல் உண்மைகளை வெளிப்படையாக எடுத்துரைக்கும் நாடகம் "செக்கு மாடுகள்" என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

**துணைநூல் பட்டியல்**

1. அ. பிரின்ஸ் (ப.ஆ.), அண்ணா ஒரு சமுதாயச் சிற்பி-I, காவியா, 16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை – 600 024, முதற் பதிப்பு, செப்டம்பர் 2008.

2. சு. பாலச்சந்திரன், இலக்கியத் திறனாய்வு, பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 16 (142), ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 14, இருபத்தி ஒன்றாம் பதிப்பு, ஜீலை 2021.

3. ………, திருக்குறள், பரிமேலழகர் உரை, பாரதி பதிப்பகம், 108 உஸ்மான் சாலை, தியாகராய நகர், சென்னை- 600 017, ஐந்தாம் பதிப்பு, ஏப்ரல் 1992.

4. தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ஞா. மரகதம், தமிழின்பம், 11, தாமு நகர், கோவை – 641 018. முதற்பதிப்பு, 1980.

5. இணைய தளம்: (https://tamil.wiki>wiki>)